லொயோலா

# ஈசி-சமூகஅறிவியல்

பருவம் 1
பருவம் 2
பருவம் 3

6

## BASED ON CCE

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

இலவசம்

Formative Assessment Fa (b)

லொயோலா பப்ளிகேஷன்
விவேக் இல்லம்
19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 7.
போன் : 0462 - 2553186, 2552405
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696

₹. 180/-

Less Strain Score More

www.Padasalai.Net

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

ஆசிரியர்கள்:

திரு. **D. கோயில்மணி**

திரு. **A. போர்ஜியோ**

திருமதி. **M.L. பத்மாவதி**

Loyola Publications

www.Padasalai.Net

## 6th EC சமூக அறிவியல் - முதன்மை புத்தகம்

**மாணவ / மாணவிகளின் உள, மனம் நலன்கருதி தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்**

### I. சிறப்புகள்

1. விடைகள் மிக எளிமையாகவும் மாணவ / மாணவிகள் எளிதில் புரியும் வண்ணம் 10, 11 மற்றும் 12ம் வகுப்பு அரசுத்தேர்வில் விடைத்தாள் மதிப்பீடு செய்வது போல் [Key] அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. 2 மற்றும் 5 மதிப்பெண் விடைகள் மாணவ / மாணவிகள் புரிந்து கொள்வதற்காக சற்று விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.
3. தேவைக்கேற்ப கூடுதல் வினாவிடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
4. மூன்று பருவமாக பிரிக்கப்பட்டுள்ளது.
5. பாடத்திற்கு பின்னால் உள்ள செயல்பாடுகளுக்கான [Fa(a)] விடை கொடுக்கப்பட்டுள்ளது.
6. 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரையுள்ள அனைத்து நூல்களும் 10, 11 மற்றும் 12ம் வகுப்பை நோக்கியே எழுதப்பட்டுள்ளது.

### II. உருவாக்க மதிப்பீட்டு - பதிவேடு [Fa(b)]

1. வளரறி மதிப்பீட்டிற்காக ஒவ்வொரு பருவத்திற்கும் நான்கு வினாத்தாள் இப்பதிவேட்டில் இடம் பெற்றுள்ளது.

**குறிப்பு :** Loyola EC புத்தகங்களை 10,11 மற்றும் 12ம் வகுப்புகளில் மாணவ / மாணவிகள் வாங்கிப் பயின்றால், அரசுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று உச்சத்தைத் தொடலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வாழ்த்துக்கள்**

அன்புடன்

**LOYOLA PUBLICATIONS**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளடக்கம்


| | அலகு | பாட தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| **முதல் பருவம்** | | | |
| **வரலாறு** | 1 | வரலாறு என்றால் என்ன? | 05 |
| | 2 | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 11 |
| | 3 | சிந்துவெளி நாகரிகம் | 17 |
| | 4 | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 28 |
| **புவியியல்** | 1 | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 36 |
| | 2 | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 45 |
| **குடிமையியல்** | 1 | பன்முகத் தன்மையினை அறிவோம் | 53 |
| | 2 | சமத்துவம் பெறுதல் | 59 |
| **இரண்டாம் பருவம்** | | | |
| **வரலாறு** | 1 | வட இந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 65 |
| | 2 | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 72 |
| | 3 | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 82 |
| **புவியியல்** | 1 | வளங்கள் | 91 |
| **குடிமையியல்** | 1 | தேசியச் சின்னங்கள் | 99 |
| | 2 | இந்திய அரசமைப்புச் சட்டம் | 104 |
| **பொருளியல்** | 1 | பொருளியல் – ஓர் அறிமுகம் | 109 |
| **மூன்றாம் பருவம்** | | | |
| **வரலாறு** | 1 | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம் | 114 |
| | 2 | இந்தியா – மௌரியருக்குப் பின்னர் | 120 |
| | 3 | பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர் | 128 |
| | 4 | தென்னிந்திய அரசுகள் | 137 |
| **புவியியல்** | 1 | ஆசியா மற்றும் ஐரோப்பா | 144 |
| | 2 | புவி மாதிரி | 155 |
| | 3 | பேரிடரைப் புரிந்து கொள்ளுதல் | 163 |
| **குடிமையியல்** | 1 | மக்களாட்சி | 167 |
| | 2 | உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும் | 172 |
| | 3 | சாலை பாதுகாப்பு | 177 |
| | | தொகுத்தறி தேர்வு வினாத்தாள் | 181 |
| | | மதிப்பீட்டு செயல்பாட்டு படங்கள் - Fa (a) | 187 |


www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in





அலகு 1

# வரலாறு என்றால் என்ன?

## பகுதி–I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைக் கண்டுபிடி

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்

இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல் **விடை: ஆ) வேட்டையாடுதல்**

### II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.

1. **கூற்று:** பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

**காரணம்:** குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்தபோது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி.

இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

**விடை: ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?

அ) அருங்காட்சியகங்கள் ஆ) புதைபொருள்படிமங்கள்

இ) கற்கருவிகள் ஈ) எலும்புகள் **விடை: அ) அருங்காட்சியகங்கள்**

3. தவறான இணையைக் கண்டுபிடி

அ) பழைய கற்காலம் - கற்கருவிகள்

ஆ) பாறை ஓவியங்கள் - குகைச் சுவர்கள்

இ) செப்புத் தகடுகள் - ஒரு வரலாற்று ஆதாரம்

ஈ) பூனைகள் - முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**விடை: ஈ) பூனைகள் – முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு**

4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்

ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

**விடை: ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் ________ **விடை: குகைகள்**
2. வரலாற்றின் தந்தை __________ **விடை: ஹெரோடோட்டஸ்**
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு __________ **விடை: நாய்**
4. கல்வெட்டுகள் ............... ஆதாரங்கள் ஆகும். **விடை: தொல் பொருள்**
5. அசோகச் சக்கரத்தில் .............. ஆரக்கால்கள் உள்ளன. **விடை: 24**

## IV. சரியா? தவறா?

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன. **விடை: சரி**
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. **விடை: சரி**
3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது. **விடை: சரி**

## V. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | பாறை ஓவியங்கள் | - அ) செப்பேடுகள் |
| 2. | எழுதப்பட்டப் பதிவுகள் | - ஆ) மிகவும் புகழ்பெற்ற அரசர் |
| 3. | அசோகர் | - இ) தேவாரம் |
| 4. | மதச் சார்புள்ள இலக்கியம் | - ஈ) வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. |

**விடை: 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.

**1. நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறு.**

- தகவல் சான்று
- கடந்த கால நிகழ்வுகளின் குறிப்பு

**2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்?**

அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகள், பாறை ஓவியங்கள், புதை படிவங்கள் மற்றும் அகழாய்வுப் பொருள்கள் மூலம் அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம்.

**3. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச்சான்றா?**

ஆம்

**4. வரலாற்று தொடக்கக் காலம் (Proto History) என்றால் என்ன?**

வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கும் வரலாற்றுக் காலத்துக்கும் இடைப்பட்டது வரலாற்று தொடக்க காலம் (Proto History) ஆகும்

**5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுது.**

சிலப்பதிகாரம்

## VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

**1. வரலாறு என்றால் என்ன?**

வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் கால வரிசைப் பதிவு ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.**

வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது கற்கருவிகளைப் பயன்படுத்தியதற்கும் எழுதும் முறைகளைக் கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

**3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?**

- கற்கருவிகள், புதை படிவங்கள், பாறை ஓவியங்கள் மற்றும் அகழாய்வுப் பொருள்கள் போன்றவை வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் ஆகும்.
- பானைகள், பொம்மைகள், நாணயங்கள் மற்றும் அணிகலன்கள் ஆகியவை இதில் அடங்கும்.

**4. வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?**

- ஆதிச்ச நல்லூர்
- அத்திரம் பாக்கம்
- பிரம்மகிரி
- ஹல்லூர்
- லோத்தல்
- பிம்பேட்கா

**5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?**

பழங்கால மனிதர்கள் பயன் படுத்திய பொருள்கள் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப் படுகின்றன. அவை அக்கால மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றி அறிய உதவுகின்றன.

**6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.**

- கற்கருவிகள்
- எலும்புகள்
- மிருகங்களின் கொம்புகள்
- மரக்கிளைகளால் செய்யப்பட்ட கருவிகள்

**7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?**

- அவர்கள் தமது வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்காக ஓவியங்கள் வரைந்திருக்கலாம்.
- மேலும் பொழுது போக்காகவும் ஓவியங்களைத் தீட்டியிருக்கலாம்.

**8. தொல் கைவினைப் பொருள்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

- பொம்மைகள்
- அணிகலன்கள்

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?**

- பழங்கால மக்களின் குகைக்குள் கொடிய விலங்குகள் நுழைந்துவிடும். அவற்றை மனிதர்களால் அறிய முடிவதில்லை. ஆனால் நாய்கள் தமது கூரிய மோப்ப உணர்வினால் அவற்றின் வருகையை அறிந்து அவர்களுக்கு உணர்த்தின. எனவே நாய்கள் பாதுகாப்பிற்குப் பயன்பட்டன.
- வேட்டையாடுவதற்கும், பாதுகாப்பிற்கும் நாய்கள் பெரிதும் பயன்பட்டன.

**2. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.**

| | பழைய கற்கால மனிதன் | தற்கால மனிதன் |
|---|---|---|
| 1. | நாடோடியாக வாழ்ந்தனர் | கிராமங்களிலும் நகரங்களிலும் குடியேறியுள்ளனர். |
| 2. | மரக்கிளைகள், பொந்துகள் மற்றும் குகைகளில் வசித்தனர். | நன்கு கட்டிமுடிக்கப்பட்டுள்ள வீடுகளில் வசிக்கின்றனர். |
| 3. | விலங்குகளின் தோல்கள், மரங்களின் பட்டைகள் மற்றும் இலைகள் ஆகியவற்றை அணிந்தனர் | பருத்தி, பட்டு போன்றவற்றாலான ஆடைகளை அணிகின்றனர் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 4. | காடுகளில் சேகரித்த காய்கள், பழங்கள் மற்றும் கிழங்குகளை உணவாகக் கொண்டிருந்தனர் | பல வகையான உணவு வகைகளை உட்கொள்கின்றனர் |
| 5. | நாகரிகமற்றவர்கள் | மிகுந்த நாகரிகமானவர்கள் |
| 6. | பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்தனர் | மிகப் பாதுகாப்பாக வாழ்கிறோம் |

## IX. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. உனது குடும்பத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகளையும் அவை நிகழ்ந்த ஆண்டுகளையும் குறிக்கவும். ஆசிரியர் உதவியுடன் தனியாக அல்லது குழுவாக இணைந்து இந்த நிகழ்வுகளைக் காலக்கோடாக வரைந்து பார்.
2. ஆதிகால மனிதன் கற்களைக் கருவியாகப் பயன்படுத்தினான். கற்களின் பயன்களைக் காட்டும் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயார் செய்க.
3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தது
   அ) ஆதிச்சநல்லூரில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகள்
   ஆ) வேள்விக்குடி செப்பேடுகள்
   இ) மகாபாரதம்
   ஈ) சாஞ்சி ஸ்தூபி
   உ) பட்டினப்பாலை
   ஊ) கீழடியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள்
   எ) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பொம்மைகள்
   ஏ) தஞ்சை பெரிய கோவில்

## X. வாழ்க்கைக் கல்வி (மாணவர்களுக்கானது)

1. களிமண்ணைக் கொண்டு பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் மாதிரிகள் தயார் செய்க.
2. தாத்தா, பாட்டி அண்டை வீட்டுக்காரர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் உரையாடி உனது தெரு, கிராமம், நகரம் அல்லது பள்ளி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றிய செய்திகளைச் சேகரி. அதன் வரலாற்றை ``நானும் ஒரு வரலாற்று ஆசிரியன்`` என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாக எழுதிப்பார்.

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| அன்று மனிதர்கள் என் மீது கிறுக்கினார்கள்; வண்ண மை கொண்டு ஓவியம் வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார்?<br>**விடை:** பாறை | ஏதேனும் இரு தொல்பொருள் ஆதாரங்களைக் கூறு.<br>**விடை:** நாணயங்கள், கல்வெட்டுகள் | இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு.<br>**விடை:**<br>மதசார்புள்ள இலக்கியங்கள்<br>மதசார்பற்ற இலக்கியங்கள் |
| பொ.ஆ.மு – இதன் விரிவாக்கம் என்ன?<br>**விடை:** பொது ஆண்டிற்கு முன் | 'இஸ்டோரியா' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள்?<br>**விடை:** விசாரிப்பதன் மூலம் கற்றல் | பொ.ஆ – இதன் விரிவாக்கம் என்ன?<br>**விடை:** பொது ஆண்டு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| கல்வெட்டுக் குறிப்புகளைப் பற்றி ஆராயும் துறை ............... **விடை:** கல்வெட்டியல் | நாணயங்களை ஆராயும் துறை ............... **விடை:** நாணயவியல் | நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார்? **விடை:** கைப்பேசி |

## பகுதி –II கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைக் கண்டுபிடி

1. 'தம்மா' என்பது ஒரு ------ சொல்.
அ) பிராகிருத ஆ) சமஸ்கிருத இ) இலத்தீன் ஈ) கிரேக்க
**விடை: அ) பிராகிருத**

### II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.

1. **கூற்று:** வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர் அசோகர் தான்.
**காரணம்:** போரில் பல உயிர்கள் மடிவதைக் கண்டு மனம் வருந்தினார்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
இ) கூற்றும் தவறு, காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி
**விடை: ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

2. **கூற்று:** 'தம்மா' என்ற பிராகிருத சொல் சமஸ்கிருதத்தில் 'தர்மா' எனப்படுகிறது. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?
அ) ஏழைகளுக்கு உதவுதல் ஆ) கடவுளுக்குக் கீழ்ப்படிதல்
இ) அறநெறி ஈ) சகிப்புத்தன்மை
**விடை: இ) அறநெறி**

3. தவறான இணையைக் கண்டு பிடி
அ) நாணயவியல் - நாணயங்கள் சார்ந்த துறை
ஆ) கல்வெட்டியல் - கல்வெட்டுக்கள் துறை
இ) காப்பியம் - திருக்குறள்
ஈ) செப்பேடுகள் - வேள்விக்குடி
**விடை: இ) காப்பியம் – திருக்குறள்**

4. மற்றதொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) அசோகரின் தர்ம சக்கரத்தில் 24 ஆரக்கால்கள் உள்ளன
ஆ) இது நமது தேசியக் கொடியில் காணப்படுகிறது.
இ) இது சாஞ்சிஸ்தூபியிலிருந்து எடுக்கப்பட்டது.
ஈ) இது மௌரியர்கள் காலத்தைச் சேர்ந்தது.
**விடை: இ) இது சாஞ்சிஸ்தூபியிலிருந்து எடுக்கப்பட்டது**

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பெரிய கோயில் அமைந்துள்ள இடம் ____________ **விடை: தஞ்சாவூர்**
2. பண்டைய இந்திய அரசர்களில் பேரும் புகழும் பெற்றவர் ____________ **விடை: அசோகர்**
3. 'இஸ்டோரியா' என்பதன் பொருள் ____________ **விடை: விசாரிப்பதன் மூலம் கற்றல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. சரியா? தவறா?

1. வரலாறு என்ற சொல் இலத்தீன் சொல்லான 'இஸ்டோரியா' என்பதிலிருந்து பெறப் பட்டது.
   **விடை: தவறு**

2. பழைய கற்கால மக்களின் வாழ்க்கை முறையை அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகள் மூலம் அறியலாம்.
   **விடை: சரி**


3. திருமலை நாயக்கர் மகால் தஞ்சாவூரில் உள்ளது.
   **விடை: தவறு**

## V. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பொம்மைகள் | - | அ) இலக்கிய ஆதாரம் |
| 2. | இதிகாசம் | - | ஆ) தொல் பொருள் ஆதாரம் |
| 3. | ஸ்தூபி | - | இ) வேலூர் |
| 4. | கோட்டை | - | ஈ) சாஞ்சி |

**விடை : 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ**

## மனவரைபடம்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அலகு 2

# மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

## பகுதி–I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. பரிணாமத்தின் வழிமுறை __________.
அ) நேரடியானது ஆ) மறைமுகமானது இ) படிப்படியானது ஈ) விரைவானது
**விடை: இ) படிப்படியானது**

2. தான்சானியா __________ கண்டத்தில் உள்ளது.
அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா
**விடை: ஆ) ஆப்பிரிக்கா**

### II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **கூற்று:** உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.
**காரணம்:** தட்பவெப்ப நிலை மாற்றமே
அ) கூற்று சரி.
ஆ) காரணம் தவறு
இ) கூற்றும் காரணமும் சரி.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.
**விடை: இ) கூற்றும் காரணமும் சரி**

### III. சரியான இணையைக் கண்டுபிடி.

அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் - இரு கால்களால் நடப்பது
ஆ) ஹோமோ ஹபிலிஸ் - நிமிர்ந்து நின்ற மனிதன்
இ) ஹோமோ எரக்டஸ் - சிந்திக்கும் மனிதன்
ஈ) ஹோமோ சேப்பியன்ஸ் - முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது
**விடை: அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் – இரு கால்களால் நடப்பது**

### IV. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை __________ உலகின் பார்வைக்குக் கொண்டுவந்தார்கள். **விடை: மானுடவியல் ஆய்வாளர்கள்**

2. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் __________ வாழ்க்கை வாழ்ந்தார்கள். **விடை: நாடோடி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் __________ மற்றும் __________ ஆகும்.
**விடை: வேட்டையாடுதல், உணவு சேகரித்தல்**

4. __________ கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியது. **விடை: கலப்பை**

5. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள _______ என்னுமிடத்தில் காணப்படுகின்றன.
**விடை: கரிக்கையூர்**

## V. சரியா, தவறா ?

1. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும். **விடை: தவறு**
2. ஹோமோ எரக்டஸ் மனிதர்களுக்கு நெருப்பு குறித்த அறிவு இருந்தது. **விடை: சரி**
3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும். **விடை: சரி**
4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு. **விடை: தவறு**

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

**1. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களின் காலத்தை அறிய என்ன முறை பயன்படுகிறது ?**
கதிரியக்கக் கார்பன் பகுப்பாய்வு முறை

**2. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள் ?**
அவர்கள் பதப்படுத்தப்பட்ட விலங்குகளின் தோல்கள், மரங்களின் கிளைகள், இலைகள் ஆகியவற்றை அணிந்தார்கள்.

**3. தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள் ?**
அவர்கள் மரம், குகை மற்றும் மலையடிவாரத்தில் வாழ்ந்தார்கள்.

**4. நிலத்தை உழுவதற்கு எந்த விலங்கு பயன்படுத்தப்பட்டது?**
எருது

**5. மனிதர்கள் எப்போது ஒரே இடத்தில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள்?**
- ➢ விவசாயம் செயல்பாட்டுக்கு வந்த பின் மக்கள் விலங்குகளைப் பழக்கி, அவற்றையும் விவசாயத்தில் ஈடுபடுத்தினர்.
- ➢ வேட்டையாடி வாழ்க்கை நடத்தியதை விட இந்த வாழ்க்கை எளிதாக இருந்தது. விவசாயம் அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறும்படிச் செய்தது.

## VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

**1. பரிணாமம் என்றால் என்ன ?**
மனித இனம் மாற்றங்களை அடைந்து, ஒரு மேம்பட்ட நிலையை நோக்கி வளர்ச்சி பெறும் வழிமுறையைப் பரிணாமம் என்கிறோம்.

**2. ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் இரு பண்புகளை எழுதுக.**
- ➢ அவர்கள் சுயமாக சிந்திக்கும் தன்மை பெற்றிருந்தனர்.
- ➢ மனிதனைப் போன்ற தோற்றம் உடையவர்கள்
- ➢ கரடு முரடான கருவிகளைப் பயன்படுத்தினர்
- ➢ வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரிக்கும் சமூகமாக வாழ்ந்தனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள் ?**

- அவர்கள் உணவு தேடி இடம் விட்டு இடம் நகர்ந்தனர்.
- நிலத்தில் விவசாயம் செய்து வந்த அவர்கள், அந்த நிலத்தின் மண்வளம் குன்றி விட்டால் வேறொரு பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள்.

**4. பழங்கால வேட்டை முறைகளை விளக்கிக் கூறவும்.**

- வேட்டையாடுதல் பழங்கால மக்களின் முக்கியத் தொழிலாகும்.
- கல்லாலும், எலும்பாலும் செய்த கருவிகளைப் பயன்படுத்தினார்கள்
- கூர்மையான கருவிகளைப் பயன் படுத்தினார்கள்
- பன்றி, மான், காட்டெருமை, காண்டாமிருகம், யானை, கரடி போன்ற விலங்குகளை வேட்டையாடினர்.

**5. கோடரிகள் ஏன் உருவாக்கப்பட்டன ?**

மரம் வெட்டவும், மரக்கிளைகளை நீக்கவும், குழிதோண்டவும், விலங்குகளின் தோலை உரிக்கவும் கோடரிகள் உருவாக்கப்பட்டன.

**6. தொல்லியல் என்பதை எவ்வாறு வரையறுப்பாய் ?**

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றிப் படிப்பது தொல்லியல் ஆகும்.

**7. மானுடவியல் பற்றி நீ அறிந்துள்ளது என்ன ?**

- மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சியையும் பற்றிப் படிப்பது மானுடவியல் ஆகும்.
- மானுடவியல் (anthropology) என்னும் சொல் இரண்டு கிரேக்க வார்த்தை களிலிருந்து பெறப்பட்டது. anthrops என்பதன் பொருள் மனிதன். Logos என்பதன் பொருள் எண்ணங்கள் அல்லது காரணம்.

## VIII. உயர் சிந்தனை வினா

**1. பழங்காலம் முதல் நவீன காலம் வரை சக்கரம் வகித்து வரும் முக்கியத்துவம்.**

- சக்கர உருவாக்கம் மனித வரலாற்றில் ஒரு முதல் தரமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.
- மலைகளிலிருந்து கற்கள் உருண்டு வருவதைப் பார்த்தபோது, சக்கரத்தை உருவாக்குவதற்கான சிந்தனையை பழங்கால மக்கள் பெற்றிருக்கலாம்.
- சக்கரத்தின் உதவியால் பானை செய்யக் கற்றுக் கொண்டனர்.
- சக்கரத்தின் உதவியினால் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதாக எடுத்துச் சென்றனர்.
- நவீன இயந்திரங்களில் சக்கரம் இல்லாத இயந்திரங்களே இல்லை எனலாம்.
- இவ்வாறு சக்கரம் தொழிற்சாலை மற்றும் போக்குவரத்தில் முக்கியப் பங்காற்றுகிறது.

## IX. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

**1.** வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த மனிதர்களின் படங்கள் அடங்கிய ஒரு படத்தொகுப்பைத் தயார் செய்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## X. வாழ்க்கைத் திறன் (மாணவர்களுக்கானது)

1. களிமண் பானைகள் மற்றும் கருவிகளைச் செய்துபார்.
2. விதவிதமான பொம்மை வண்டிகளைச் சேகரி. அவற்றில் செவ்வகம், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களில் சக்கரங்களைப் பொருத்தி, வண்டிகள் எப்படி நகர்கின்றன என்று சோதனை செய்து பார்.

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| _________ கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு பானை செய்வதை எளிதாக்கியது.<br>**விடை:** சக்கரம் | பண்டப்பரிமாற்றமுறை என்பது _________ ஆகும்.<br>**விடை:** ஒரு பொருளைக் கொடுத்து, அதற்குப் பதிலாக வேறு ஒரு பொருளைப் பெறுவது. | தொடக்க கால மனிதர்கள் வேட்டைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களில் இரண்டைக் கூறு.<br>**விடை:** கல் கோடாரி. கல் சுத்தியல் |
| ஆயுதங்கள் செய்வதற்கு ஏற்ற கல் எது ?<br>**விடை:** சிக்கி முக்கிக் கல் | நகரங்களும் பெருநகரங்களும் _________ மற்றும் _________ ஆகியவற்றால் தோன்றின.<br>**விடை:** வணிகம், வர்த்தகம் | மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எது?<br>**விடை:** சக்கரம் |
| பாறை ஓவியங்களில் உள்ள உருவங்களை அடையாளம் காணவும்<br>**விடை:** வேட்டையாடுதல் மற்றும் நடனமாடுதல் | தொடக்க கால மனிதர்களின் முதன்மையான தொழில் எது?<br>**விடை:** வேட்டையாடுதல் | குகை ஓவியங்கள் மூலம் நாம் என்ன அறிந்துகொள்கிறோம்?<br>**விடை:** மக்களின் கடந்த கால வாழ்க்கை முறைபற்றி அறிந்து கொள்கிறோம் |
| தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?<br>**விடை:** குகைகளில் வாழ்ந்தார்கள் | _________ தொல்லியல் துறையுடன் தொடர்புடையது.<br>**விடை:** மானுடவியல் | தொடக்க கால மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளில் இரண்டைக் குறிப்பிடு.<br>**விடை:** நாய், எருது |

# பகுதி – II கூடுதல் வினாக்கள்

## I. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**கூற்று:** தொடக்ககால மனிதர்கள் வேட்டையாட துப்பாக்கியைப் பயன்படுத்தினார்கள்.

**காரணம்:** ஒரு குச்சி அல்லது கல்லால் பெரிய விலங்கினைக் கொல்வது கடினமாக இருந்தது.

அ) கூற்றும் காரணமும் சரி  ஆ) கூற்றும் காரணமும் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி  ஈ) கூற்று சரி, காரணம் தவறு

**விடை: இ) கூற்று தவறு, காரணம் சரி**

## II. சரியான இணையைக் கண்டுபிடி.

அ) ஹோமோ சேப்பியன்ஸ் - ஆப்பிரிக்கா

ஆ) ஹோமோ ஹெபிலிஸ் - தென் ஆப்பிரிக்கா

இ) ஹோமோ எரக்டஸ் - ஆசியா

ஈ) குரோ மக்னான்ஸ் - சீனா

**விடை: ஈ) குரோ மக்னான்ஸ் – சீனா**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சரியா, தவறா?

1. நியாண்டர்தால் மனிதர்கள் இறந்தவர்களைப் புதைத்தனர். **விடை: சரி**
2. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வண்டிகளை இழுக்க மக்கள் குதிரைகளைப் பயன் படுத்தினர். **விடை: தவறு**
3. ஹோமோ சேபியன்ஸ் சுயமாக சிந்திக்கும் மனிதர்கள். **விடை: சரி**
4. சிக்கிமுக்கிக் கல் அவர்களுக்கு எளிதாகக் கிடைத்தது. **விடை: தவறு**
5. வரலாற்றுக்கு முந்தைய மக்கள் இரும்பிலான நாணயங்களைப் பயன்படுத்தினர் **விடை: தவறு**

## IV. சுருக்கமான விடை தருக.

**1. 1850 ஆம் ஆண்டில் மக்களின் போக்குவரத்து முறை எவ்வாறு இருந்தது?**

- பேருந்துகளோ, மிதிவண்டிகளோ காணப்படவில்லை
- மாடுகள் அல்லது கோவேறி கழுதைகள் பூட்டப்பட்ட வண்டிகளைப் பயன்படுத்தினர்.
- குதிரை வண்டிகள் அரிதாகவே காணப்பட்டன.

**2. பண்ட மாற்று முறை என்றால் என்ன?**

பழங்கால மக்கள் தேவைக்கு அதிகமாக தங்களிடம் இருந்த தானியங்களை, பிற குழுக்களிடம் பரிமாற்றம் செய்து தங்களுக்குத் தேவையானவற்றைப்பெற்றுக் கொண்டார்கள். இது பண்டமாற்று முறை எனப்பட்டது.

**4. பழங்கால மனிதர்களின் வாழ்வில் நெருப்பு இன்றியமையாத இடத்தைப் பிடித்தது எவ்வாறு?**

நெருப்பு இவர்களைக் காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கவும், சமைக்கவும், இரவில் ஒளியை உருவாக்கவும் பயன்பட்டது. இவ்வாறு அவர்களின் வாழ்வில் நெருப்பு இன்றியமையாத இடத்தைப் பிடித்தது.

***** ***** *****

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனவரைபடம்

ஆஸ்ட்ரலோபிதிகஸ் → ஹோமோ ஹேபிலிஸ் → ஹோமோ எரக்டஸ் → நியாண்டர்தால் → ஹோமோ சேப்பியன்ஸ் → குரோமக்னான்ஸ்

**சிறப்பியல்புகள்**

- வேட்டையாடுதல் → பன்றி, மான், காட்டெருமை, காண்டாமிருகம், யானை, கரடி
- உணவு சேகரித்தல் → மீன் பிடித்தல், தேன் சேகரித்தல், பழம் பறித்தல்
- நெருப்பின் பயன்பாடு → சிக்கி முக்கிக் கல்
- பானை செய்தல் → சக்கரம்
- குகை ஓவியங்கள் → மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளுதல்
- விவசாயம் → கலப்பையின் பயன்– எருது
- வாணிபம் → பண்ட மாற்று முறை

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அலகு 3

# சிந்துவெளி நாகரிகம்

## பகுதி–I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1.** சிந்து வெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?
1. செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் 2. செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
3. செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி. 4. செம்பு, வெள்ளி, இரும்பு,தங்கம்

**விடை: 1. செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்**

**2.** சிந்து வெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது?
1. பழைய கற்காலம் 2. இடைக்கற்காலம்
3. புதிய கற்காலம் 4. உலோக காலம்

**விடை: 4. உலோக காலம்**

**3.** ஆற்றங்கரைகள் 'நாகரிகத்தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்
1. மண் மிகவும் வளமானதால்
2. சீரான கால நிலை நிலவுவதால்
3. போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்
4. பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**விடை: 4. பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்**

### II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1.** **கூற்று** - ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.
**காரணம்** - திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு
1. கூற்றும் காரணமும் சரி. 2. கூற்று தவறு, காரணம் சரி.
3. கூற்று சரி, காரணம் தவறு. 4. கூற்றும் காரணமும் தவறு.

**விடை: 1. கூற்றும் காரணமும் சரி**

**2.** **கூற்று** - ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.
**காரணம்** - ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.
1. கூற்றும் காரணமும் சரி.
2. கூற்று தவறானது, காரணம் சரி.
3. கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
4. கூற்று மற்றும் காரணம் தவறானவை.

**விடை: 1. கூற்றும் காரணமும் சரி**

**3.** **கூற்று** - ஹரப்பா மக்களின் பொறியியல் திறன் குறிப்பிடத்தக்கது
**காரணம்** - கடலின் அலைகள், ஓதங்கள் நீரோட்டத்தைக் கணித்த பின் கப்பல் கட்டும் தளத்தைக் கட்டியிருப்பது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1. கூற்றும் காரணமும் சரி.
2. கூற்று தவறானது, காரணம் சரியானது.
3. கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
4. கூற்று மற்றும் காரணம் தவறானவை. **விடை: 1. கூற்றும் காரணமும் சரி**

**4.** கீழே கூறப்பட்டுள்ள மொகஞ்ச-தாரோவை பற்றிய கூற்றுகளில் எவை சரியானவை?
1. தங்க ஆபரணங்கள் பற்றித் தெரியவில்லை
2. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.
3. கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன.
4. பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.

**விடை: 2 மற்றும் 4. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.**

**5.** கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.
1. நகரங்கள், தெருக்களின் வடிவமைப்பு மற்றும் செங்கல் அளவுகள் ஆகியவற்றில் சீரான-தன்மை.
2. ஒரு விரிவான மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு.
3. தானியக் களஞ்சியம் ஹரப்பா நகரங்களில் முக்கியமான பகுதியாக விளங்கியது.

மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை?

1) 1 & 2 2) 1 & 3 3) 2 & 3 4) அனைத்தும் சரி

**விடை: 4) அனைத்தும் சரி**

**6.** பொருந்தாததை வட்டமிடு.
காளைகள், ஆடுகள், எருதுகள், பன்றிகள், குதிரைகள் **விடை: குதிரைகள்**

**7.** தவறான இணையைத் தேர்ந்தெடு
1. ASI - ஜான் மார்ஷல்
2. கோட்டை - தானியக் களஞ்சியம்
3. லோத்தல் - கப்பல் கட்டும் தளம்
4. ஹரப்பா நாகரிகம் - காவிரி ஆறு

**விடை: 4. ஹரப்பா நாகரிகம் – காவிரி ஆறு**

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ____________ மிகப் பழமையான நாகரிகம். **விடை: மெசபடோமியா நாகரிகம்**
2. இந்தியாவின் தொல்லியல் ஆய்வுத் துறை ____________ என்ற நில அளவையாளர் உதவியுடன் தொடங்கப்பட்டது. **விடை: அலெக்ஸாண்டர் கன்னிங்காம்**
3. ____________ தானியங்கள் சேகரித்து வைக்கப் பயன்பட்டது. **விடை: தானியக்களஞ்சியம்**
4. மக்கள் குழுக்களாகச் சேர்ந்து ____________தை உருவாக்குகிறார்கள். **விடை: சமுதாயத்தை**

## IV. சரியா? தவறா?

1. மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடமாகும். **விடை: சரி**
2. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வியல் துறை தொல்பொருள் ஆராய்ச்சிக்கும், நாட்டின் கலாச்சார நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பிற்கும் பொறுப்பானது. **விடை: சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. **விடை: சரி**

4. முதல் எழுத்து வடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது. **விடை: தவறு**

## V. பொருத்துக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | மொகஞ்ச-தாரோ | அ | மேடான பகுதி | **விடை** | ஈ | இறந்தோர் மேடு |
| 2. | வெண்கலம் | ஆ | சிவப்பு மணிக்கல் | | இ | உலோகக் கலவை |
| 3. | கோட்டை | இ | உலோகக் கலவை | | அ | மேடான பகுதி |
| 4. | கார்னிலியன் | ஈ | இறந்தோர் மேடு | | ஆ | சிவப்பு மணிக்கல் |

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி

**1. உலோகங்களின் பயன்களைக் கூறு.**

- தங்கம், வெள்ளி ஆகியவை ஆபரணங்கள் செய்ய பயன்பட்டன
- செம்பு, வெண்கலத்தால் ஆயுதங்கள் மற்றும் பாத்திரங்கள் செய்யப்பட்டன.
- சிலைகள் செய்வதற்கு வெண்கலம் பயன்பட்டது.
  (உ-ம்) வெண்கலத்தால் ஆன நடன மாது சிலை

**2. நாம் உண்ணும் உணவில் வேக வைத்த உணவு, பச்சையான உணவு என ஒரு பட்டியலை உருவாக்கு.**

**வேகவைத்த உணவு:** அரிசி, கோதுமை, காய்கள், கீரைவகைகள், கிழங்குகள், இறைச்சி ஆகியவை

**பச்சையான உணவு:** பழங்கள், காய்கள் மற்றும் கொட்டைகள்

**3. மிருகங்களையும் மரங்களையும் வழிபடும் பழக்கம் நம்மிடையே உள்ளதா?**

ஆம். சில மதத்தினர் மிருகங்களையும் மரங்களையும் வழிபடுகின்றனர்.

**4. ஆற்றங்கரைகள் நாகரிகத் தொட்டில்கள். ஏன்?**

- ஆற்றங்கரைகளில் வளமானமண் அமைந்திருந்தது
- ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும், கால்நடைகளின் தேவைகளுக்கும், நீர்ப்பாசனத்திற்கும் பயன்பட்டது.
- ஆறுகள் போக்குவரத்துக்கு ஏற்ற வழிகளாக இருந்தன. எனவே மக்கள் ஆற்றங்கரைகளில் குடியேறினர். அப்பகுதிகளில் நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தன. ஆகவே ஆற்றங்கரைகள் நாகரிகத் தொட்டில்கள் எனப்பட்டன.

**5. ஒரு பொம்மை நகர்வதாலேயே அதை நவீன கால பொம்மைகள் என்று பொருள் கொள்ள முடியாது. சிந்து வெளி மக்கள் பொம்மைகளில் பேட்டரிக்கு (மின் கலம்) மாற்றாக எதைப் பயன்படுத்தினர்?**

அவர்கள் சக்கரத்தைப் பயன்படுத்தினர்.

**6. நீ ஒரு தொல் பொருள் ஆய்வாளர் எனில் என்ன செய்வாய்?**

எனது மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூருக்குச் சென்று, அங்கு தொல்பொருள் ஆராய்ச்சி செய்வேன்.

**7. இந்திய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சிந்து சமவெளி நாகரிகம் பரவியிருந்த இரு பகுதிகளைக் கூறு.**

கலிபங்கன், லோத்தல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**8. சிந்து வெளி நாகரிகத்தின் கூறுகளில் உன்னைக் கவர்ந்தது எது? ஏன்**

- சிந்துவெளி நாகரிகத்தின் கூறுகளில் கழிவு நீர் அமைப்பு என்னைக் கவர்ந்தது.
- மூடப்பட்ட கழிவுநீர்வடிகால் அமைப்பு. அது செங்கலாலும், கல்தட்டைகளாலும் மூடப் பட்டிருந்தது. அன்றிலிருந்து 5000 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இன்றும் சில நவீன நகரங்களில் மூடப்பட்டவடிகால் அமைப்பு இல்லை.
- கழிவு நீர்ப் பொருட்களை அப்புறப்படுத்த துளைகள் அமைக்கப்பட்டிருந்தன.
- திடக்கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக் கழிவுகளைத் தேக்கி, கழிவு நீரை மட்டும் வெளியேற்றின.

**9. தற்காலத்தில் பொருட்களின் நிறையை அளக்க என்ன கருவி பயன்படுத்தப்படுகிறது?**

மின் எடைத் தராசு.

## VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி

**1. புதைந்த கட்டிடங்களைக் கண்டுபிடிக்க தற்போது எந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது?**

- அகழ்வாராய்ச்சியாளர்கள் செங்கற்கற்கள், கற்கள், உடைந்த பானை ஓடுகள் போன்றவற்றை ஆராய்ந்து அவை பயன்படுத்தப்பட்ட காலத்தை அறிந்து கொள்கிறார்கள்.
- பண்டைய இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்துகின்றனர்.
- வான் வழி புகைப்படங்கள் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள்.
- நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை (Magnetic scanner) பயன்படுத்துகின்றனர்.
- எஞ்சிய தொல்பொருட்கள் புதையுண்டு இருக்கின்றனவா இல்லையா என்பதை ரேடார் கருவி மூலம் தொலை நுண்ணுணர்வு முறை மூலம் கண்டறிகின்றனர்.

**2. சிந்து வெளி நாகரிகம் வெண்கல கால நாகரிகம் என ஏன் அழைக்கப்படுகிறது?**

மக்கள் வெண்கலத்திலான பொருட்களைப் பயன்படுத்தினர். எனவே இது வெண்கல கால நாகரிகம் எனப்படுகிறது.

**3. சிந்து வெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம் காரணம் கூறுக.**

- சிறப்பான நகரத்திட்டமிடல்
- சிறப்பான கட்டடக் கலை வேலைப்பாடு
- தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை.
- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்
- விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கான திடமான அடித்தளம்.

**4. கழிவு நீர் வடிகால் அமைப்பின் சிறப்பைக் கூறு.**

- மூடப்பட்ட கழிவுநீர் வடிகால் அமைப்பு. இது செங்கலாலும் கல் தட்டைகளாலும் மூடப் பட்டிருந்தது.
- வடிகால் மென்சரிவைக் கொண்டிருந்தது.
- கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக சரியான இடைவெளியில் துளைகள் இருந்தன.
- ஒவ்வொரு வீட்டிலும் திடக் கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக்கழிவுகளைத் தேக்கி, கழிவுநீரை மட்டும் வெளியேற்றின.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**5. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.**

- ➢ பெருங்குளம் நன்கு அகன்று செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும்.
- ➢ இது நீர் கசியாத கட்டுமானத்திற்கான மிகப்பழமையான சான்று ஆகும்.
- ➢ குளத்தின் சுவர்கள் செங்கலால் கட்டப்பட்டு, நீர் கசியாமல் இருப்பதற்காக இயற்கைத்தார் பூசப்பட்டிருந்தது.
- ➢ குளத்தின் இருபுறத்திலும் படிக்கட்டுகள் அமைந்திருந்தன.
- ➢ குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் இருந்தன.
- ➢ உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேற வகை செய்யப்பட்டிருந்தது.

**6. சிந்து வெளி மக்கள் வெளிநாட்டினருடன் வணிகத்தில் ஈடுபட்டனர் என்பதை நீ எவ்வாறு அறிந்து கொள்கிறாய்?**

- ➢ மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்ற முத்திரைகள் சிந்து வெளியிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இது இரு பகுதிகளுக்கிடையே நடந்த வணிகத்தைக் காட்டுகிறது.
- ➢ சுமேரியாவின் அக்கடியப் பேரரசின் அரசன் நாராம்-சின் சிந்து வெளிப்பகுதியிலிருந்து அணிகலன்கள் வாங்கியதாக எழுதியுள்ளார்.
- ➢ குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல்கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது அவர்களின் கடல் வணிகத்தை உறுதிப் படுத்துகிறது.

## VIII. உயர் சிந்தனை வினாக்கள்

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ளச் சிந்து வெளியின் சிறப்பம்சங்களைக் கவனித்துத் தற்காலத்துடன் ஒப்பிடு**

1. விளக்குக் கம்பங்கள் 2. சுட்ட செங்கற்கள்
3. நிலத்தடி வடிகால் அமைப்பு 4. எடைகள் மற்றும் அளவீடு 5. கப்பல் கட்டும் தளம்

### 1. விளக்குக் கம்பங்கள்:

- ➢ சிந்து வெளிப்பகுதியின் விளக்குக் கம்பங்கள் ஒரு சிறப்பம்சம் ஆகும். அக்காலத்தில் கல்லாலான விளக்குக் கம்பங்கள் இருந்தன. தற்போது இரும்பு மற்றும் சிமிண்டு விளக்குத் தூண்கள் உள்ளன.

### 2. சுட்ட செங்கல்கள்:

- ➢ சிந்து வெளிப் பகுதியில் வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. ஏனெனில் சுட்ட செங்கற்கள் வலுவானவை, கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை, நெருப்பைக் கூட தாங்குபவை. மேலும் அவை நீரில் கரைவதில்லை
- ➢ தற்காலத்திலும் கட்டடங்கள் சுட்ட செங்கலால் கட்டப்படுகின்றன.

### 3. நிலத்தடி வடிகால் அமைப்பு:

- ➢ சிந்துவெளிப்பகுதியில் மூடப்பட்ட நிலத்தடி வடிகால் அமைப்பு இருந்தது. அது செங்கற்கலாலும் கல்தட்டைகளாலும் மூடப்பட்டிருந்தது. கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக சரியான இடைவெளியில் துளைகள் இருந்தன.
- ➢ தற்காலத்தில் கூட சில நகரங்களில் மூடப்பட்ட நிலத்தடி வடிகால் அமைப்பு இல்லை. தற்போதுதான் சில நகரங்களில் இம்முறை பயன்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாட்டில் அனைத்து மாநகராட்சிகளிலும் இம்முறை பயன்பாட்டில் உள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. எடைகள் மற்றும் அளவீடு:**

- சிந்து வெளிநாகரிக மக்கள் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகளைப் பயன்படுத்தினர். அளவு கோல்களையும் பயன்படுத்தினர்
- தற்காலத்தில் நாம் பல்வேறு விதமான மின் அளவீடுகளைப் பயன்படுத்துகிறோம்

**5. கப்பல் கட்டும் தளம்:**

- குஜராத்திலுள்ள லோத்தல் என்ற இடத்தில் ஒரு கப்பல்கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.
- தற்போது அநேகமாக அனைத்து பெரிய துறைமுகங்களிலும் கப்பல் கட்டும் மற்றும் பழுது நீக்கும் வசதிகள் உள்ளன.
  எ.கா: மும்பையிலுள்ள மேசகவான் கப்பல்கட்டும்தளம்.

---

**2. வேளாண்மை சிந்துவெளி மக்களின் தொழில்களுள் ஒன்று – எவ்வாறு நிரூபிப்பாய்? (கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை வைத்து)**

- சிந்து வெளி மக்களின் தொழில்களில் ஒன்று வேளாண்மை. அவர்கள் கோதுமை, பார்லி, திணைவகைகள், எள் மற்றும் பயறு வகைகளைப் பயிரிட்டனர்.
- தானியங்களை சேகரிக்க தானியக்களஞ்சியங்கள் கட்டப்பட்டன.
- எடுத்துக்காட்டாக ஹரியானா மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தானியக் களஞ்சியத்தைக் கூறலாம்.
- மேலும் கலப்பைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- எனவே சிந்து வெளி மக்கள் வேளாண்மைத் தொழில் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

---

**3. மட்பாண்டங்களும் அதன் உடைந்த துண்டுகளும் சிந்துவெளி பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நீ அறிவது என்ன?**

- அவர்கள் மட்பாண்டங்கள் செய்யக் கற்றிருந்தனர் என்பது தெரிகிறது.
- உடைந்த பானைத்துண்டுகளிலிருந்த விலங்குகளின் உருவங்கள், அவர்கள் விலங்குகளை வளர்த்தனர் என்பதைக் காட்டுகிறது.
- பானைத் துண்டுகளிலுள்ள சித்திரங்கள் அவர்களது ஓவியம் மற்றும் வண்ண வேலைப் பாடுகளிலிருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது
- அவர்கள் உணவுகளை சமைத்து உண்டனர் என்பதும் தெளிவாகிறது.

---

**4. லோத்தல் ஒரு கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீ அறிவது என்ன?**

லோத்தலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கப்பல் கட்டும் தளம் அவர்கள் கடல் வணிகத்தை மேற்கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

---

**5. ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணம் என்ன?**

ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்குக் காரணங்கள் பின்வருமாறு.

- அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு
- படையெடுப்பு
- காலநிலை மாற்றம்
- தொற்று நோய்த் தாக்குதல்
- சுற்றுச்சூழல் மாற்றம்
- இயற்கைச் சீற்றங்கள்
- காடுகள் அழிதல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. மாணவர் செயல்பாடு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) லோ | | பா | ப் | ர | (2) ஹ | | | (3)மா | ர் |
| | | த் | | (4) கி | ண | று | | பு | | ர் | (6) தா |
| | | த | | (5) வெ | ண் | க | ல | ம் | | ஷ | |
| றை | து | ல் | ய | வி | ள | அ | ள் | ரு | பொ | ல் | (7) தொ |
| | | | | | | | | (8) இ | | | |
| (10) தா | னி | ய | க் | க | ள | ஞ் | சி | ய | ம் | | |

1. ஒரு குறிப்புப் புத்தகம் தயாரி. (மொகஞ்ச- தாரோ மற்றும் ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைப் பற்றிய செய்திகள்)
2. சிந்துவெளி நாகரிகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இடத்தில் ஒரு தொல்லியல் ஆராய்ச்சியாளராக உன்னை நினைத்துக் கொள். நீ எதையெல்லாம் சேகரிப்பாய்?
3. தகவல் அட்டை தயாரி. (சதுர அட்டைகளை எடுத்துக் கொள். அதில் சில அட்டைகளில் படங்களை ஒட்டு. சில அட்டைகளில் அதற்கான தகவல்களை எழுது. மாணவர்களிடம் இந்த அட்டைகளைக் கொடுத்துப் பொருத்தச் செய்).
4. கற்பனையாக ஒரு மாதிரி நகர அமைப்பை வரைந்து பார்.
5. சிந்துவெளி நாகரிகத்தின் ஏதாவது ஓர் அமைப்பை களிமண், வளையல் துண்டுகள், தீக்குச்சிகள், கம்பளி நூல் மற்றும் ஐஸ்கிரிம் குச்சிகள் கொண்டு வடிவமைத்தல்.
6. விளையாட்டு பொம்மைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் எவ்வாறு மாறியுள்ளன என்று உன்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?
   களிமண் → கல் → மரம் → உலோகம் → பிளாஸ்டிக் → விலங்குகளின் உரோமம் (fur) → மின்சாரம் → மின்னணு → ???

**7. குறுக்கெழுத்து**

### இடமிருந்து வலம்

(4) ஒவ்வொரு வீட்டிலும் ________ இருந்தது.
(5) இது ________ கால நாகரிகம்.
(10) தானியங்களை சேகரித்து வைக்கப் பயன்பட்டது.

### வலமிருந்து இடம்

(2) மொகஞ்ச-தாரோவை விட பழமையானது
(6) இது நீர் கசியாமல் இருக்கப் பூசப்பட்டது.
(7) இது தான் தொல்பொருள் ஆய்விற்கு பொறுப்பு வகிக்கிறது.

### மேலிருந்து கீழ்

(1) கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
(3) இந்தியத் தொல்பொருள் ஆய்வியல் துறையின் இயக்குநராக இருந்தவர்.



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கீழிருந்து மேல்**

(8) சிந்துவெளி மக்களுக்கு இதன் பயன் தெரியாது.

## வினாடி – வினா

1. சிந்துவெளி மக்கள் ஆடை தயாரிக்க எதைப் பயன்படுத்தினர்? **விடை: பருத்தி**
2. முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நாகரிக நகரம் எது? **விடை: ஹரப்பா**
3. சிந்துவெளி நாகரிகம் எங்கு இருந்தது? **விடை:சிந்து நதிச் சமவெளியில்**
4. எந்த விலங்கு வண்டி இழுக்கப் பயன்பட்டது? **விடை: எருது**
5. சிந்து வெளி மக்களுக்கு எந்த உலோகம் தெரியாது? **விடை: இரும்பு**
6. பானை செய்வதற்கு எதைப் பயன்படுத்தினர்? **விடை: சக்கரம்**
7. உலகின் நான்கு பழம்பெரும் நாகரிகங்களில் மிகப் பழமையானது எது? **விடை: மெசபடோமியா நாகரிகம்**

## X. வாழ்க்கைத் திறன் (மாணவர்களுக்கானது)

1. களிமண்ணைக் கொண்டு ஒரு விலங்கு அல்லது பானை செய்யுங்கள்.
2. நகரும் கைகால்களைக் கொண்ட சுடுமண் பொம்மைகளைச் செய்யுங்கள்.
3. பானையில் ஓவியம் தீட்டு (வடிவியல் படங்களுடன் கூடிய முறையில்)
4. தகவல் சுவரொட்டிகள் மற்றும் காட்சிப் பதாகைகள் செய்தல்.

## XII. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| சார்லஸ் மேசன் எதைப் பார்த்தார்? **விடை:** சில செங்கல் திட்டுகள் | சிந்து வெளி மக்கள் பயன்படுத்திய பொருள்களுள் தற்போது நாம் எவற்றையெல்லாம் பயன்படுத்துகிறோம்? (ஏதேனும் மூன்று கூறு) **விடை:** பொம்மைகள் , வண்டி, ஆபரணங்கள் | வேறு என்னென்ன பொருள்கள் எல்லாம் கிடைத்துள்ளன? **விடை:** நடன மாது சிலை, பொம்மைகள், உடைந்த பானைத் துண்டுகள், ஆபரணங்கள், வெண்கலப் பொருட்கள் |
| சிந்துவெளி மக்களுக்குத் தெரியாத மூன்றைக் கூறு? **விடை:** துப்பாக்கி, காகிதம், மை | எந்த உலோகம் சிந்து வெளி மக்களுக்குத் தெரியாது ? **விடை:** இரும்பு | உலகின் மிகப் பழமையான நாகரிகம் எது? **விடை:** மெசபடோமிய நாகரீகம் |
| முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு நாய். ஏன்? **விடை:** அது அவர்களுக்கு வேட்டையாடுவதில் உதவியது | முதன் முதலில் பருத்திச் செடியை வளர்த்தவர்கள் யார்? **விடை:** சுமேரியர்கள் | எந்த நிறுவனம் புதை பொருள் ஆராய்ச்சிக்குப் பொறுப்பானது? **விடை:** இந்தியத் தொல்லியல் துறை |
| தமிழ் நாட்டில் ஏதேனும் ஆற்றங்கரை நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா? **விடை:** வைகை (கீழடி) | சிந்து வெளி நாகரிகம் பரவிய இரண்டு இடங்கள் எவை? (இந்தியாவின் எல்லைக்குள்) **விடை:** லோத்தல், கலிபங்கன் | சிந்து வெளி நகரங்கள் குழந்தைகளுக்கான நகரங்கள் என நாம் கூற முடியுமா? **விடை:** முடியாது |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி – II கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1. இந்தியத் தொல்லியல் துறையின் தலைமையகம் அமைந்துள்ள இடம்.
அ) சென்னை ஆ) மும்பை இ) கொல்கத்தா ஈ) புது டெல்லி
**விடை: (ஈ) புது டெல்லி**

2. கூட்ட அரங்கு அமைந்துள்ள இடம்
அ) ஹரப்பா ஆ) மொகஞ்ச தாரோ
ஈ) லோத்தல் ஈ) கலிபங்கன் **விடை: (ஆ) மொகஞ்ச தாரோ**

3. நாகரிகம் என்ற இலத்தீன் மொழி வார்த்தையான 'சிவிஸ்' என்பதன் பொருள்
அ) நகரம் ஆ) கிராமம் இ) மக்கள் ஈ) ஆட்சி செய்
**விடை: (அ) நகரம்**

4. மனிதர்களால் முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்ட மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட உலோகம்.
அ) இரும்பு ஆ) செம்பு இ) வெண்கலம் ஈ) வெள்ளி **விடை: (ஆ) செம்பு**

### II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக.

1. கீழ்க்காணும் கூற்றுக்களில் எது சரியானது?
அ) மனிதர்களால் உபயோகப்படுத்தப்பட்ட முதல் உலோகம் செம்பு.
ஆ) சிந்து வெளிமக்கள் வண்டிகளை இழுக்க குதிரைகளைப் பயன்படுத்தினார்கள்
இ) மொஹஞ்சதாரோ ஹரப்பாவை விட பழமையானது.
ஈ) ஹரப்பா நாகரிகம் ஒரு கிராம நாகரிகம்.
**விடை: (அ) மனிதர்களால் உபயோகப்படுத்தப்பட்ட முதல் உலோகம் செம்பு.**

2 கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.
1. சிந்து வெளி தெருக்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன
2. அங்கு அரண்மனைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.
3. அங்கு வழிபாட்டுத்தலங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.
மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது/எவை சரியானவை
அ) 1 & 2 ஆ) 1 & 3 இ) 2 & 3 ஈ) அனைத்தும் சரி **விடை: (அ) 1 & 2**

3. பொருந்தாததை வட்டமிடுக.
ஹரப்பா, மொஹஞ்சதாரோ, லோத்தல், கலிபங்கன், லாகூர் **விடை: லாகூர்**

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. 1924 இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநராக இருந்தவர் ______
**விடை: ஜான் மார்ஷல்**

2. இந்தியத் தொல்லியல் துறை நிறுவப்பட்ட ஆண்டு ______ **விடை: 1861**

3. முதல் எழுத்து வடிவத்தை உருவாக்கியவர்கள் ______ **விடை: சுமேரியர்கள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. கிசே பிரமிடைக் கட்டிய மன்னர் ________________ **விடை: குஃபு**

5. தானியக் களஞ்சியம் ________________ சேகரித்து வைப்பதற்காகப் பயன்பட்டது. **விடை: தானியங்களை**

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி

**1. மக்கள் ஏன் நதிக்கரைகளில் குடியேறினர்?**

- மக்கள் நதிக்கரைகளில் குடியேறக் காரணங்கள் பின் வருமாறு
- வளமான மண்
- ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும், கால்நடைகளின் தேவைகளுக்கும் நீர்ப்பாசனத்திற்கும் பயன்பட்டது.
- ஆறுகள் போக்குவரத்துக்கு ஏற்ற வழிகளாக இருந்தன.

**2. கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தபட்டன?**

- ஏனென்றால் அவை வலுவானவை,கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை.
- நெருப்பைக் கூடத் தாங்கக் கூடியவை.
- மேலும் அவை நீரில் கரைவதில்லை.

**3. சிந்து வெளி மக்களின் தொழில்கள் பற்றி எழுது.**

- வேளாண்மை, கை வினைப் பொருட்கள் செய்தல் போன்ற தொழில்களை செய்தனர்.
- அங்கு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் கைவினைஞர்களும் இருந்தனர்.
- கால்நடைகளை வளர்த்தனர்.

**4. பானை வனைதல் பற்றி சிலவரிகள் எழுதுக.**

- பானைகள் செய்ய சக்கரத்தைப் பயன்படுத்தினர்.
- அவை தீயிலிட்டு சுடப்பட்டன
- அவற்றிற்கு வர்ணங்கள் தீட்டினர்.
- அவற்றில் விலங்குகளின் உருவங்களை வரைந்தனர்.

***** ***** *****

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மனவரைபடம்

## நகர நாகரிகம்
## சிந்து வெளிநாகரிகம்
## ஹரப்பா – மொகஞ்சதாரோ

### வீடுகளும், தெருக்களும்
நேரான, அகலமான தெருக்கள், செங்கற்களால் வீடுகள், கழிவறை, குளியலறை

### பெருங்குளம்
அகன்ற, செங்குத்தான குளம், சுட்ட செங்கலால்கட்டப்பட்ட சுவர். படிக்கட்டுகள்,அறைகள்

### கழிவு நீர் அமைப்பு
மூட்டப்பட்ட கழிவுநீர் வடிகால் – துளைகள்

### தானியக் களஞ்சியம்
பெரிய, உறுதியயான கட்டட அமைப்பு. தானியங்கள் சேகரிப்பு

### கூட்ட அரங்கு
மிகப் பெரும் பொதுக் கட்டடம் பரந்து விரிந்து கூடம்

### வணிகம் மற்றும் போக்குவரத்து
பெரும் வணிகர்கள்
தரப்படுத்தப்பட்ட எடைகள்
விரிவான கடல் வணிகம்

### ஆடைகள்
பருத்தி மற்றும் கம்பளி ஆடைகள் அணிந்தனர்

### ஆபரணங்கள்
ஆண்களும் பெண்களும் ஆபரணங்களை அணிந்தனர். கழுத்தணிகள், கையணிகள் வளையல்கள்,மோதிரங்கள் காதணிகள் அணிந்தனர். வெள்ளி, தங்கம், சங்கு, செம்பு, சுடுமண், விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டன.

### தொழில்
வேளாண்மை, கைவினைப் பொருள்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல்– வணிகர்கள், வர்த்தகர், கால்நடை வளர்த்தல்.

### சமய நம்பிக்கை
மதநடைமுறை பற்றிய ஆதாரங்கள் இல்லை. தாய் தெய்வ வழிபாடு

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com